# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

***Mobile: 0449 892 066***

***Email :mtdruitttsc@gmail.com*** ***Web : www.mtsc.org.au***


### செய்தி மடல் 2018 — 02

**12-05-2018**

“*மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாம் தமிழை*” கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.



1. *பேச்சுப்போட்டி*

   எமது பாடசாலையின் வருடாந்த **பேச்சுப்போட்டி எதிர்வரும் 02.06.2018 சனிக்கிழமையன்று மாலை 1.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில்** ஆரம்பமாகி நடைபெறும். போட்டிகள் நடைபெறும் மாணவர்களின் வகுப்பு(ஆண்டு) ரீதியிலான ஒழுங்கு அன்றைய தினமே தீர்மானிக்கப்படுவதால் அனைத்து மாணவர்களும் மாலை 1.00 மணிக்கு முன்னதாக சமூகமளித்து தங்கள் அடையாள எண்ணைப் பெற்றுக்கொள்ளவும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான பிரதிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். இதுவரை அதனை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.



2. *ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல்*

   **பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 02.06.2018 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம்** எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

3. *அரையாண்டுப் பரீட்சை*

   மாணவர்களுக்கான **அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 23.06.2018** அன்று வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

4. *கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை* (Federation Exam)

   **தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை எதிர்வரும் 16.06.2018 அன்று எமது பாடசாலையில் நடைபெறும்.** இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் மற்ற விபரங்களையும் எமது பாடசாலை பொருளாளரும் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பின் உபபொருளாளருமான **திரு. பேரம்பலம் மகேஸ்வரமூர்த்தி** அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

5. *அமைச்சர் விருது* (Minister Award)

   இந்த வருடம் அமைச்சர் விருதுபெறுவதற்கு தகுதியான எமது பாடசாலை மாணவர்களில் தெரிவை எமது பாடசாலை அதிபர் மற்றும் கல்விக்குழுவினர் மேற்கொள்வார்கள். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை எமது பாடசாலை அதிபர் தொடர்பு கொள்வார்.

6. *பாடசாலை நேரம்*

   பிள்ளைகளை பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும்போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

7. *மாணவர்களின் விபரங்கள்*

இந்த வருடம் அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) உருவாக்க இருப்பதால் இவை அனைத்தையும் உள்ளடக்கிய புதிய தரவுதள விண்ணப்பப்படிவம் (Online Application Form) தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் உங்களது அல்லது உங்கள் பெற்றோரது மின்னஞ்சல் (email) முகவரியை எமது காரியாலயத்தில் சமர்ப்பித்து உங்கள் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் இணைப்பின் (link) மூலம் இதனை பூர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8. *மாணவர் வரவு*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

9. *பெற்றோர் கொடுப்பனவு*

இதுவரை தங்கள் பங்களிப்பை செலுத்த தவறிய பெற்றோர்கள் இந்த ஆண்டிற்கான கட்டணத்தை செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். ( ஒரு மாணவர் வருடக் கட்டணம் $100, மற்றும் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களிற்கு வருடக்கட்டணம் $175.) மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்புகொள்ளவும்.

10. *பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்குமுறைகள்*

- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும்.
- உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும்.
- வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பு உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc )பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

11. *குடும்ப குதுகல தினம் (Family Fun Day)*

எமது பாடசாலையில் முதன்முறையாக கடந்த 17.03.2018 திகதியன்று கொண்டாடப்பட்ட குடும்ப குதுகல தினம் சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பை வழங்கிய மாணவர்கள், பெற்றேர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.




12. *பாடசாலைவிடுமுறை*

எமது பாடசாலையின் **தவணை இரண்டு எதிர்வரும் 07.07.2018** அன்றுடன் முடிவடைந்து **மூன்றாம் தவணை வருகின்ற 28.07.2018** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.



*என்றும் இருக்க உளங்கொண்டாய்*
*இன்பத் தமிழ்க் கிலக்கியமாய்*
*இன்றும் இருத்தல் செய்கின்றாய்*
*இறவாய் தமிழோ டிருப்பாய் நீ !*




